# அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
# International Institute of Tamil Arts

## தமிழ்க்கலைத் தேர்வு - 2023

பாடம்: நடனம் (பரதம்) தரம்: ஏழு

(ஆற்றுகைத்தரம்)

**நேரம்: 210 நிமிடங்கள் (இரு பகுதிகளுக்கும்)**

## பகுதி ஒன்று

**பகுதி 1 இல் முதலாம் வினா உட்பட மூன்று வினாக்களுக்கும், பகுதி 11 இல் முதலாம் வினா உட்பட மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

1. அ. இறைவன் ஆடிய தாண்டவங்கள் ஏழில் அருளல் தாண்டவம் ஆடிய சந்தர்ப்பத்தினைச் சுருக்கமாக விளக்குக.
   (ஆடிய இடம், சபை என்பவற்றினையும் குறிப்பிடுக)

   ஆ. "பரதக்கலையானது ஒரு மனிதனின் உடல், உள, ஆன்மிக மனோவளர்ச்சிக்கு பெரிதும் துணைபுரிகிறது." இககூற்றின் பொருத்தப்பாட்டினைச் சுருக்கமாகத் தருக.
   (20 புள்ளிகள்)

2. பின்வரும் கலைச்சொற்களை விளக்குக.
   அ. டமருகயதி
   ஆ. ஒலி
   இ. குறவஞ்சி
   ஈ. நவசந்தி நாட்டியம்
   உ. ஒப்பனை
   (15 புள்ளிகள்)

3. "இலங்கையில் நடனக்கலை மறுமலர்ச்சியும் அக்காலக்கலைஞர்கள் கலைப்பணியும்" என்ற தலைப்பில் கட்டுரை வரைக. (15 புள்ளிகள்)

4. தென்னிந்தியக் கலைவடிவமான பரதநாட்டித்தினையும், பிற இந்திய நடன மரபான மோகினி ஆட்டத்தினையும் ஒப்புநோக்கி ஆராய்க.
   (வரலாறு, தத்துவம், நடன இசை, ஒப்பனை போன்ற அம்சங்கள் இடம்பெற வேண்டும்)
   (15 புள்ளிகள்)

(ம.ப.பா)

அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
International Institute of Tamil Arts

# தமிழ்க்கலைத் தேர்வு - 2023

பாடம்: நடனம் (பரதம்) தரம்: ஏழு

(ஆற்றுகைத்தரம்)

நேரம்: 210 நிமிடங்கள் (இரு பகுதிகளுக்கும்)

## பகுதி இரண்டு

**முதலாவது வினா உட்பட மூன்று வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.**

1. அ. இன்றைய பரத நடன ஆசிரியர்களுடன் குரு லக்ஷணத்தில் குறிப்பிடப்படும் நடன குருமார்கள் பரத நடனம் கற்பிக்கும் முறைமைகளை ஒப்புநோக்கி விளக்குக.

   ஆ. ஐரோப்பிய நாடுகளில் மாணவரிடையே நடாத்தப்படும் நடனப்போட்டிகள் மாணவரின் ஆளுமை, தன்னம்பிக்கை, முயற்சி, நேர்மனப்பாங்கு, கலாசார விழுமியங்கள் ஆகியவற்றில் ஏற்படுத்தும் சாதக, பாதக விளைவுகளைத் தருக.

   இ. அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தினால் (IITA) நடனத்துறையில் ஆற்றுகைத் தேர்வினை நிறைவு செய்த மாணவர்களுக்கு வழங்கப்படும் பட்டயச்சான்றிதழின் பெயர் என்ன? (20 புள்ளிகள்)

2. கண்டஜாதி மட்டிய தாளத்தில் நான்கு ஆவர்த்தனங்களுக்கு குறையாத கோர்வை ஒன்றினை கோபுச்சயதியில் நிறைவுறுமாறு தாளாங்கக் குறியீட்டில் எழுதுக. (15 புள்ளிகள்)

3. “அண்மைக்காலமாக ஏற்பட்ட கொவிட் - 19 நோயின் தாக்கம் உலகளாவிய ரீதியில் பரதம் கற்றல், கற்பித்தலில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் மாணவரின் கலை ஈடுபாடு வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.” இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை விளக்கித் தருக. (15 புள்ளிகள்)

4. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்புகள் எழுதுக.

   அ. அபிநயப்பாடல்

   ஆ. நடன வகுப்பறை

   இ. மாணவ லக்ஷணம்

   ஈ. குழுமுறைக் கற்பித்தல்

   உ. கற்பித்தல் சாதனங்கள் (15 புள்ளிகள்)